கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அப்பொழுதே சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டார்களே !

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட அங்கத்தினர் வேண்டு மானல் கோர்ட்டுக்குப் போகலாம். ஆனால், இதிலே எல்லா அங்கத் தினர்களும்தான் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்பது என் னுடைய பிரச்னே.

MR. SPEAKER : Ruling is reserved.

9-30 a.m

(2) EDITORIAL IN THE DAILY "NAM NADU".

MR. SPEAKER : The hon. Member, Sri Karcha Gowder, has given notice of a privilege matter. His case is clear and he may explain it, confining his argument to facts and rules.

* **திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் இந்த மன்றத்திலே 3-3-1965 அன்று நிகழ்த்திய உரையைப் பற்றி 5-3-65 அன்று "நம் நாடு" என்ற பத்திரிகையிலே என்னை இழித்தும், குறைத்தும் எடிடோரியல் எழுதப் பட்டிருக்கிறது. எடிடோரியல் அல்லது ஆசிரியர் பகுதியில், 'கார்ச்சா கவுடரின் காட்டுக் கூச்சல்' என்று, நான் இந்தச் சபை யிலே நிகழ்த்திய உரையைப்பற்றித் தீட்டியிருக்கிருர்கள்.

அடுத்தபடியாக சில வாசகங்களை தங்கள் அனுமதியின் பேரில் சபை முன் கொண்டுவர விரும்புகிறேன். 'விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப் பினர் கார்ச்சா கவுடர் அவர்கள், தம்மியல்புப்படி, கழகத்தை முறையற்ற முறையில் தூற்றி இருக்கிருர் அவர் தூற்றலைக் காட்டுக் கூச்சல் என்றுதான், வேதனையோடு குறிப்பிட வேண்டிய தாகிறது.' கனம் எதிர்க் கட்சித் தலைவர் ஆசிரியாராக இருக்கும் ஒரு பத்திரிகையில் இப்படி எழுதப்பட்டிருப்பதைக் கண்டு வேதனைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, "எதிர்க்கட்சிகளால் தூண்டப்பட்ட ரௌடி களையும்—ஏன்—எதிர்க்கட்சிகளில் சிலரையும் பீரங்கிகொண்டு சுட்டிருந்தாலும் நான் வரவேற்று இருப்பேன்" என்று சொன்ன தாகப் போடப்பட்டிருக்கிறது. ஆனால் நான் "எதிர்க் கட்சியிலே உள்ள இப்படிப்பட்ட சிலரையும், முதல் அமைச்சர் அவர்கள் துப்பாக்கி பிரயோகம் அல்லது பீரங்கி வைத்துச் சுட்டு இந்த நாட்டின் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்திருந்தாலும் நான் வரவேற்றிருப்பேன்" என்றுதான் சொன்னேன் என்று இந்தச் சமயத்தில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன், அது தான் சட்டசபை ரிகார்டில் இருக்கிறது.

அதற்குப் பிறகு, "சட்ட மன்ற உறுப்பினர் கார்ச்சா கவுடர் அவர்கள் வெளியிட்டிருக்கின்ற கருத்து; நூற்றுக்கு நூறு பொய் யாகும், அவர் பேச்சில் கடுகளவு மனித உணர்வும் இருப்பதாகத் தெரியவில்லை" என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு கடுமை யாக எதிர்க் கட்சித் தலைவர் ஆசிரியராக இருக்கும் பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறதே என்று நினைக்கவே முடியவில்லை.

8th March 1965] *[திரு. டி. கார்ச்சா கவுடர்]*

அதற்கு மேலாக, நான் சேர்ந்திருக்கும் தொகுதி மக்களை அவமானப்படுத்தும் வகையில், "காட்டாந்த மலைப் பகுதியைச் சேர்ந்த கார்ச்சா கவுடரிடம், இத்தகைய காட்டுக் கூச்சலைத் தவிர வேறு எதையும் நாம் எதிர் பார்க்கக் கூடாது போலும்" என்று எழுதி நான் சேர்ந்திருக்கும் தொகுதி மக்களையும் குறைவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது.

அதன் பிறகு, "முதல் அமைச்சர்—கார்ச்சா கவுடர் ஆக இருவரும் கூட்டாக."

கனம் சபாநாயகர் : அதிலே ஒன்றும் இல்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த மாதிரி நான் பேசியதைத் திரித்தும், முறையற்ற வகையிலேயும் ஆசிரியர் பகுதியில் தலைப்புக் கொடுத்து எழுதியிருப்பது குறித்து நான் வருந்துகிறேன். ஆகவே அதைத் தங்களுடைய தீர்ப்பிற்கு விட்டு தாங்கள் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

** திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் "நம் நாடு" தலையங்கத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். "நம் நாடு" வெளியிட்டிருக்கிற தலையங்கத்திலுள்ள கருத்துக்கள் பற்றியும் சுட்டிக் காட்டினார்கள். நான் அந்த ஏட்டுக்கு ஆசிரியனாக இருக்கிறேனே அல்லாது தலையங்கம் எழுதுவதெல்லாம் துணை ஆசிரியர்கள் தான். அப்படி எழுதும் துணை ஆசிரியர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும், அவர்கள் எழுதும் தலையங்கங்களுக்குக் கீழே அவர்கள் கையெழுத்துப் போட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். இந்தத் தலையங்கம் கூட திரு. காஞ்சி கலியாணசுந்தரம் எழுதியது என்று கையெழுத்திலிருந்து தெரிந்து கொள்ள முடியும். இதை நான் எதற்காக குறிப்பிடுகிறேன் என்றால், துணை ஆசிரியர்களால் எழுதப்பட்டது என்பதை எடுத்துக் காட்டவேதான். அது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும், அதற்காக நான் மிகவும் வருத்தப்பட்டேன். இந்தச் சட்டமன்ற உறுப்பினருடைய கவுரவத்திற்குக் குறைவு வரக்கூடாது என்று எண்ணுபவன் நான் உறுப்பினர் மதிப்பைக் குறைக்கும் செயலில் எப்பொழுதும் ஈடுபடாதவன் நான் என்பதை இந்த மன்றம் உணரும். யார் மனதையும் புண்படுத்தக் கருதாதவன் நான். இந்தத் தலையங்கம் என் பார்வைக்கு வந்தவுடனேயே, துணை ஆசிரியரைக் கண்டித்ததோடு எதிர்க் கட்சியில் உள்ள யாரையும்பற்றி அப்படி எழுதக் கூடாது என்றும் எச்சரித்திருக்கிறேன். அதற்காக வருத்தம் தெரிவித்து, 'வருந்துகிறோம்' என்ற தலைப்போடு, அந்த ஏட்டில் மறுநாள் நானே என் பெயரில் எழுதியிருக்கிறேன். திரு. கார்ச்சா கவுடர் அவர்களைப்பற்றித் தவறாக எழுதப்பட்டு விட்டது, அதற்காக வருந்துகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அதோடு மட்டுமல்ல, இந்த பிரச்சினை வருவதற்கு முன்பாகவே, தங்களிடம், இதற்காக வருந்துகிறேன், இனிமேல் இம்மாதிரி ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லியுள்ளேன். கனம் உறுப்பினர் திரு. கார்ச்சா கவுடர் மட்டுமின்றி, மற்ற சட்ட மன்ற*

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [8th March 1965

உறுப்பினர்களும், யாராக இருந்தாலும், குறைவான முறையில் தாக்கப்படக் கூடாது என்பதில் அக்கறை கொண்டவன் என்ற முறையில் வருத்தம் தெரிவித்திருக்கிறேன் என்பதையும் இந்த மன்றத்தின் முன்னால் குறிப்பிடுகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றி இதோடு விட்டு விடலாம் என்று கருதுகிறேன்.

MR. SPEAKER : Of course, there is a *prima facie* case of breach of privilege. But I appreciate very much the sentiments expressed by the hon. the Leader of the Opposition, who is also the Editor of that paper. Therefore, I think that the matter may be dropped.

IV.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR 1965-66—*cont.*

MR. SPEAKER : The general discussion on the Budget will continue. The hon. Member, Sri C. Chiranjeevulu Naidu, will now speak. He should take only five to six minutes.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Speaker, Sir, I would like to say a few words on the Budget which has been presented before this House. As the time allotted to me is only six minutes, I would like to restrict myself to a few points. I welcome this Budget and the way in which it has been presented. The Budget speech has been a lengthy one—self-explanatory in nature—containing all the particulars regarding the developmental activities in the State. For the intensive cultivation of agriculture, a proper programme has been chalked out. Also in regard to minor irrigation and other schemes, much incentive is given to the agriculturists.

Regarding the industrial development of the State, I would like to say a few words. There has been a lopsided development so far as industries are concerned. There is concentration of industries in certain places and I request the Government to kindly look into that aspect of the matter and see that all the parts of the State are covered and given the benefit of industrialisation.

As regards power, there has been a notable improvement and that has to be appreciated.

So far as education is concerned, it has been proposed to open seven colleges. I would request the Government to open one college in Tiruvallur or Tiruttani to serve the needs of Tiruvallur, Tiruttani and Ponneri taluks.

As regards provision for medical facilities, I would request the Government to make some more allotment for the construction of buildings for the primary health centres and their staff in the rural areas.

It has been a matter for appreciation and gratification that the Dearness Allowance has been increased. We hope that the employees of the State Government will discharge their responsibilities and realise the need for toning up the administration. In